# நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

## வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர கருத்திட்டம் (TNSWSP)

## வெற்றிடங்களுக்கான அறிவித்தல்

### அறிமுகம்

வர்த்தகர்கள் நாட்டின் எல்லைக்கு குறுக்கான தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கான (இறக்குமதி, ஏற்றுமதி மற்றும் பரிமாற்றங்கள்) ஆவணங்கள் மற்றும் தரவுத் தேவைகளை எல்லை வர்த்தக ஒழுங்குமுறை முகவர் நிறுவனங்களுக்கு சமர்ப்பிப்பதற்கான ஒற்றை நுழைவுப் புள்ளியாக வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்பை நிறுவுவதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இவ்வகையான செயல்முறைகளின் முடிவு, இத்தானியங்கி வர்த்தக தேசிய ஒற்றைச் சாளர அமைப்பின் மூலம் விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படும்.

இதன்படி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு, முன்மொழியப்பட்ட வர்த்தகத் தேசிய ஒற்றைச் சாளர அமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக பிரத்யேக திட்ட அமுலாக்கப் பிரிவொன்றினை (PIU) நிறுவுவதற்கு அமைச்சில் தற்போதுள்ள ஆளனியிலிருந்து மட்டும் முன்மொழியப்பட்ட இப்பிரத்தியேக திட்ட அமுலாக்கப் பிரிவிற்காக கீழ்வரும் பதவிகளுக்கு மிகவும் தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருவதற்கு தீர்மானித்துள்ளது;

| தொ.இல | பதவிப் பெயர் | பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முகாமைத்துவ உதவியாளர் | **01** |
| 2 | நிதி உதவியாளர் | **01** |
| 3 | சாரதி | **01** |
| 4 | அலுவலக உதவியாளர் | **01** |

### தகுதிகள்

#### 1) முகாமைத்துவ உதவியாளர்

- அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பெறப்பட்ட மனிதவளம் அல்லது வணிகத்தில் டிப்ளோமா / பொதுநிர்வாகம், அல்லது தொடர்புடைய துறையில், வேறு எதாவது உயர்தகுதிகள் மற்றும்
- அரசாங்க நிறுவனத்தில் நிர்வாகத்துறை சார்பாக ஆகக்குறைந்தது 6 வருட அனுபவம்: மற்றும்
- கள முகாமைத்துவம், அறிக்கை எழுதுதல், ஆவண பராமரிப்பு தொடர்பான அனுபவம் கட்டாயமானது:
- மிகச் சிறந்த கணனி அறிவு (கட்டாயமாக ஆகக்குறைந்தது 06 மாதங்களுக்கு குறையாத கணனி கற்கை நெறியை பூர்த்திசெய்திருத்தல்):
- சிறந்த தொடர்பாடல் திறன்:
- மிகச் சிறந்த ஆங்கில மொழியறிவு.

## 2) நிதி உதவியாளர்.

- அரசாங்கத்தால் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பெறப்பட்ட நிதி அல்லது கணக்கீட்டில் டிப்ளோமா அல்லது தொடர்புடைய ஒரு துறையில், வேறு எதாவது உயர்தகுதிகள் மற்றும்
- அரசாங்க நிறுவனத்தில் நிதித்துறை சார்பாக ஆகக்குறைந்தது 06 வருட அனுபவம்: மற்றும்
- கணக்கறிக்கை எழுதுதல், கணக்கறிக்கையை ஆய்வு செய்தல், சம்பளம் தயாரித்தல், ஏனைய கணக்கியல் தொடர்பான செயற்பாடுகள் தொடர்பான அனுபவம் கட்டாயமானது:
- மிகச் சிறந்த கணனி அறிவு (கட்டாயமாக ஆகக்குறைந்தது 06 மாதங்களுக்கு குறையாத கணனி கற்கை நெறியை பூர்த்திசெய்திருத்தல்):
- சிறந்த தொடர்பாடல் திறன்:
- மிகச் சிறந்த ஆங்கில மொழியறிவு.

## 3) அலுவலக உகவியாளர்

- ஓர் அலுவலக உதவியாளராக அரசாங்க நிறுவனம் ஒன்றில் ஆகக்குறைந்தது 06 வருட கடமை அனுபவம்.

## 4) சாரதி

- ஓர் சாரதியாக அரசாங்க நிறுவனம் ஒன்றில் ஆகக்குறைந்தது 06 வருட கடமை அனுபவம்.

**பொது நிபந்தனைகள்**

- வயது 2024.04.26 இல் உள்ளபடியாக 57 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் 36 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிக்கமர்த்தப்படுவார்கள். இது வருடாந்திர செயல்திறன் மதிப்பீட்டின் அடிப்படையில் ஆண்டுதோறும் ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு உட்பட்டது.
- தேவையான அனைத்து தகுதிகளும் 2024.04.26 அன்று அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்
- வெற்றிடங்கள் நிரப்பப்படல் அவசியமா இல்லைா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளரையே சாரும்.
- இந்த ஆட்சேர்ப்புச் செயற்பாட்டின் போது இதில் இல்லாத ஏதேனும் ஒரு விடயத்திலோ அல்லது ஏதேனும் சிக்கல் ஏற்படும் சந்தர்ப்பத்திலோ நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமானதாக அமையும்.
- 2019 மார்ச் 05 ஆம் திகதிய 01/2019 இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் படி சம்பளம் மற்றும் இதர சலுகைகள் வழங்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

இவ் அறிவிப்பில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின்படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் அவர்களின் திணைக்களத்தலைவர் ஊடாக 26.04.2024 அன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்பவும். பிற ஆவணங்களுடன் விண்ணப்பம் அடங்கிய தபால்உறையின் இடதுபக்க மேல்மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவி கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்**
வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
செயலகம்
கொழும்பு 01.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்காணலுக்கு அழைக்கப்படுவார்கள் அத்துடன் தேவைப்படும் அணைத்து ஆவணங்களுடனும் முழுமைபெறாத விண்ணப்பங்கள் தகுதியிழப்பிற்கு காரணமாயிருக்கும்.

**முகவரி:**
செயலாளர்
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
திகதி: 05.04.2024